REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 29உ செவ்வாய் (15—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 30உ புதன் (16—11—55) [இதழ் 131

அணுகுண்டுக்கு மேலும் ஒருவர் பலி!

டோக்கியோ, நவ. 14—

பத்து ஆண்டுகளுக்கு முன் ஹிரோஷிமா தீவில், அணுகுண்டு வெடித்தபோது, அது வெடித்த இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள் இருந்தும் உயிர் தப்பிய 40 வயதுப் பெண்மணி ஒருவர் இப்போது, அடுத்து வெடித்த குண்டு விளைவித்த வியாதியினால் இறந்துபட்டதாக ஜப்பான் செய்தி நிறுவனமான 'க்யோடோ' தெரிவித்திருக்கிறதாம்.

இம்மாதிரி இந்த ஆண்டு இறந்துபட்டவர்களில் இந்தப் பெண்மணி 15-வது நபர் என்றும் தெரிவிக்கப்பட்டதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

இராசேந்திரரின் பழைய பல்லவி!

ரஷ்யத் தலைவர்களுக்கு இந்தியில் வரவேற்பு

சென்னை நகர மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு

'வெளி நடப்பு' செய்வதாக ஐக்கிய நகர மன்றக் கட்சியினர் எச்சரிக்கை

"மார்ஷல் புல்கானின், தோழர் குருஷ்சேவ் ஆகியோருக்குத் தரப்படும் வரவேற்புகள் ரஷ்ய, இந்தி மொழியில் மட்டுமே இருக்க வேண்டும்—என்று, இந்திய சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாக பத்திரிகைச் செய்தி மூலம் அறிகிறேன்.

"இந்தியாவின் பதினான்கு மொழிகளும் இந்தியைப் போலவே சமநிலை உடையவை—என்று கூறுகிற அரசியல் சட்ட விதிகளுக்கு முரணானதாக இந்திய சர்க்காரின் உத்தரவு இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விழைகிறேன். தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை நகரம், மதிப்பிற்குரிய விருந்தாளிகளுக்கு மாநில மொழியான தமிழில்தான்—தமிழில் மட்டும்தான் வரவேற்பு தரவேண்டும்.

"எனவே, நான் மிகப் பணிவன்புடன்—ஆனால், உறுதியாக வேண்டுவது எல்லாம், வரவேற்பு இதழ்களை தாங்கள் தமிழிலேயே தயாரிக்க வேண்டுமென்பதுதான்.

"இந்தியில் வரவேற்பளிப்பது என்று முடிவு செய்யப்படுமானால், நானும், இதர ஐக்கிய நகர் மன்றக் கட்சி உறுப்பினர்களும் வரவேற்பு விழாவின்போது, 'வெளிநடப்பு'ச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்) **வி. முனுசாமி,**
செயலாளர், ஐக்கிய நகர மன்றக் கட்சி,
சென்னை நகரசபை, சென்னை.

மேலே தரப்பட்டிருப்பது, தோழர் வி. முனுசாமி அவர்கள் நகரசபைத் தலைவருக்கு 12-11-55 அன்று தேதியிட்டு எழுதியுள்ள கடிதத்தின் உண்மை நகல்.

தோழர் கே. விநாயகம் அவர்கள், இதே கருத்தை நகரசபைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். இந்தியில் வரவேற்பு தரப்பட்டால், தான் விழாவிலிருந்து 'வெளி நடப்பு'ச் செய்வதாகப் பேசியிருக்கிறார்.

இந்தி திணிக்கப்படவில்லையாம்!

தமிழின் இடத்தைப் பறிக்கும் நோக்கமில்லையாம்!

அரசியல் சட்ட பாதுகாப்பிருந்தும் இந்தி எதிர்ப்பு ஏன் என்று தெரியவில்லையாம்!

வடவரின் இந்தி திணிப்புகுறித்து குடியரசுத் தலைவர்

சென்னை, நவ. 14—

"இந்தி மொழியை எவர்மீதும் திணிக்கும் நோக்கம் எங்களில் எவருக்குமில்லை. இந்தியைத் திணித்து தமிழ் பெற்றுள்ள இடத்தைப் பறிக்கவேண்டும் என்பதும் எங்கள் நோக்கமல்ல.

"அகில இந்திய காரியங்களுக்காக இந்தி தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணம் அது எல்லா வகையாலும் சவுகரியமானதாயிருப்பதுதான்.

"சந்தர்ப்பவசமாக இந்திய மக்களில் பெரும்பாலானோர் இந்தி பேசுபவர்களாயிருக்கின்றனர். பிற மொழி பேசுபவர்களைவிட இந்தி பேசுவோர் எண்ணிக்கை அதிகம். அதன் காரணமாகவே இந்தி அகில இந்திய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. தேசியக் காரியங்களின் வசதியை முன்னிட்டே இந்தி ஏற்கப்பட்டது. இது பகுத்தறிவிற்குகந்த காரியமாகும்.

"இந்தி அகில இந்திய மொழியாயிருப்பதிலும் அரசியல் சட்டத்தில் சில வரம்புகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

"அகில இந்திய அரசியல் விவகாரங்களுக்கு மட்டுமே இந்தி பயன்படுத்தப்படவேண்டும்; வட்டார மொழிகளின இடத்தை இந்தி பறிக்கக்கூடாது என்று திட்டவட்டமாக்கப்பட்டிருக்கிறது.

"இவ்விதம் வரையறை, கட்டுப்பாடு நிர்ணயிக்கப்பட்டிருக்கையில் ஏன்தான் தென்னாட்டில் இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறதோ புரியவில்லை.

"இந்தி அகில இந்திய மொழியாக்கப்பட்டிருப்பதால் பிற மொழிகள் பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது; இது வேண்டாத அச்சமாகும்.

"நான் இந்தி மொழி பேசுபவன், இந்தி மொழி பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தவன் என்ற முறையில் நான் இங்கு உறுதிமொழி கூறுகிறேன்—தமிழுக்கோ அல்லது இதர வட்டார மொழிகளுக்கோ பதிலாக இந்தியைத் திணிக்கும் உத்தேசம் வடநாட்டவருக்கு இல்லை. முட்டாள்தனமாக யாராவது வட்டார மொழிகளின் இடத்தை இந்திக்குப் பெற்றுத்தர முற்படுவார்களேயானால் அது நடக்காது என்பதை சீக்கிரமே உணர்வார்கள். நான் திரும்பவும் கூறுகிறேன் நாங்கள் அவ்வளவு முட்டாள்களல்ல."

—என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், சென்னை ராஜாஜி மண்டபத்தில், நேற்று, கம்பர் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்:—

இந்தி மொழி வளர்ச்சியில் மற்றவரும் பங்குகொள்ள வேண்டும். காலத்திற்கேற்ற மாறுதல் அடையும் ஆற்றல் பெற்றது இந்தி; அம்மொழி வளர்ச்சிக்கு நீங்களும் உதவ வேண்டும்; அப்படி உதவுவதின் மூலம் தேசிய மொழியில் நீங்களும் சொந்தம் கொண்டாட வேண்டும்; இதுவே என் வேண்டுகோள்."

தென்னாப்பிரிக்க இனக் கொள்கை

இந்தியப் பேரரசு கண்டனம்

ஐ. நா. விற்குத் தந்துள்ள மனு ஒன்றுடன் இந்தியப் பேரரசினர் எழுதியுள்ள கடிதத்தில், தென்னாப்பிரிக்க சர்க்காரின் இனவேறுபாட்டுக்கொள்கை ஒழிக்கப்படாவிட்டால் அது உலக சமாதானத்திற்கு உலைவைக்கும் பெரும் அபாயத்தை மூட்டக்கூடியதாக முடியும் என்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கட்டுப்பாடு நீடிக்க வேண்டுமென சிபாரிசு

பசை மாவு, மற்றும் சவ்வரிசி மாவு இவற்றில் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று சுங்க வரிக் குழுவினர் சிபாரிசு செய்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

★

'தமிழ் எங்கள் மொழி...' உன்னோடு! உன் வீட்டோடு!

"மார்ஷல் புல்கானின் இங்கு 'விஜயம்' செய்கிறபோது, அவருக்கு அளிக்கப்படும் வரவேற்புகள்—ரஷ்ய மொழியிலும், இந்தி மொழியிலும் மட்டுமே இருத்தல் வேண்டும்."

—மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் விடுத்துள்ள தாக்கீதில் இது தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்!

'புவியோர் போற்றிடும் புது முறை வகுத்தோய் வருக!'

'புத்துலகச் சிற்பியே வருக!'

'போர் வெறி மடிந்திடத் தளராது உழைக்கும் தலைவா வருக!'

—என்றெல்லாம் எழுதினீர்களோ, தீர்ந்தது—இந்திய சர்க்காரின் தாக்கீதின்படி இவை 'வரவேற்பு இதழ்'களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது; இந்தியில்தான் எழுதித் தரவேண்டும்!

வெளிநாட்டிலிருந்து வரும் தலைவரின் கண்களில் இந்திதான் தெரியவேண்டும்—பிறமொழிகள், உன்னோடு! உன் வீட்டோடு!!'

இந்திக்கு எந்தவகையான 'ஏற்றம்' தரப்படுகிறது என்பதற்கு—புல்கானின் வரவேற்புக்கு இந்தி மட்டுமே இருத்தல் வேண்டும் என்ற இறுமாப்பும், எதேச்சாதிகாரமும், மொழிவெறியும்கொண்ட சர்க்கார் தாக்கீது, மறுக்கொணாத எடுத்துக்காட்டுத்தான்; ஆயினும், என்ன செய்வது? இந்தி ஆதிக்கம் என்பது சர்க்காரின் திட்டமல்ல என்று நம்பிடும் மன்னார்சாமிகள் இருக்கிறார்களே!

மன்னார்சாமிகள், இருக்கவேண்டிய இடத்திலேயும் அல்லவே—ஆட்சி மன்றங்களில்!

—'திராவிட நாடு'

மரவள்ளி மாவால் தயாராகும் சவ்வரிசி

'பண்பு'களைப் பரிசிலனை செய்ய குழு நியமனமாகிறது

இந்திய சர்க்கார் திட்டமென்ன?

புதுடில்லி, நவ. 14—

மரவள்ளிக்கிழங்கு மாவினால் தயாரிக்கப்படுகிற சவ்வரிசியின் சத்துத் தன்மையையும், இதர பண்புகளையும் பரிசீலித்து அதன் 'தர'த்தை அபிவிருத்தி செய்வதற்கு வழி கூறுவதற்காக இந்திய சர்க்கார் நிபுணர் குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

இந்தியாவில் இதுவரையில், சவ்வரிசி என்ற பெயரில் விற்பனையாகிவந்த பொருள் இதர நாடுகளில் தயாராகும் சவ்வரிசியல்லாத வேறு பொருளா என்பது பற்றியும் அதன் சத்தின் தரமும், கூந்தல் பனை வகையறாவைச் சேர்ந்த 'சாகோ' பனையிலிருந்து தயாரிக்கப்படுகிற சவ்வரிசிக்கும்—இதற்குமுள்ள சத்தின் தர வேறுபாடு பற்றியும் குழு ஆராயும்.

சவ்வரிசி, வயிற்றுக்கு இதமான நல்ல பொருள்தானா, சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் அதைக் கொடுக்கலாமா என்பன பற்றியும் அது பரிசீலிக்கும்.

உபயோகிப்பவர்களுக்கு முதல் தரமான சவ்வரிசி கிடைக்கும்படி செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முறைகள் பற்றியும் அக் குழு சிபாரிசு செய்யும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

வெளிநாட்டுத் தோழர்கள் கவனிக்க

திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா அன்பும், குறையா ஆர்வமும் கொண்டு வடநாடு—இலங்கை—பர்மா—மலேயா ஆகிய பகுதிகளில் வாழும் தோழர்கள் மாநில மாநாட்டுக்கான நிதியைப் பெருமளவில் பெருமுயற்சியோடு சேர்த்து உடனடியாகத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பிற வெளி நாடுகளில் உள்ள தோழர்களும் இம்முயற்சியில் இறங்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

வடநாடு—இலங்கை—பர்மா—மலேயா ஆகிய இடங்களிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் நிதி திரட்டுவதற்கு ஆவனவெல்லாம் செய்யும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுச்செயலாளர், தலைமைக் கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

'அறிவகம்' 14-11-'55 } —தி.மு.க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

செக்கோஸ்லோவேகிய போர்ச் சாதனங்கள்

லண்டன், நவ. 14—

செக்கோஸ்லோவேகியா ஏற்கனவே எகிப்திற்கு 'பாக்கட்' நீர்மூழ்கிகளும், சிரியாவிற்கு டாங்கிகளும் வழங்கிவிட்டதாக, லண்டன் 'டெய்லி மெயில்' இருபருக்குத் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—11—'55 செவ்வாய்

நேருவின் உபதேசம்!

வட நாட்டுத் தலைவர்கள் சமீபகாலமாக இந்தியாவின் 'ஒற்றுமை'யை நிலைநிறுத்துவதில் மிகுதியான அக்கரை காட்டி வருகிறார்கள் என்பது குறித்து நாம் இங்கு அடிக்கடி எழுதி வருகிறோம்.

'ஒற்றுமை' குறித்து அடிக்கடி அவர்கள் பேசுவதும், 'இந்தியாவின் ஒற்றுமை'யில் தான் இந்தியாவின் உயர்வு இருப்பதாக மக்களுக்கு நாள் தவறாமல் உபதேசிப்பதும் ஒரு பெரும் உண்மையை உள்ளடக்கியிருக்கிறது என்பதை யூகம் படைத்தோர் மட்டுமின்றி, சாதாரண அரசியல் அறிவு பெற்றிருப்போரும் அறிவர்.

ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் வாழும் மக்கள்—'தாங்கள் அனைவரும் ஒரே சமூகத்தவர்; ஒரே நாட்டவர்; ஒத்த மதிப்பும், வாழ்வும் உடையவர்கள்'—என்ற எண்ணம் கொண்டவர்களாகத் தொன்றுதொட்டு இருந்து வந்திருப்பார்களேயானால், அந்த மக்களிடத்திலே பிளவு உண்டுபண்ணிவிடுவது எளிதில் முடியக்கூடியதல்ல என்பதும், அப்படியே அவர்கள் பிரிக்கப்பட்டாலும் மீண்டும் ஒன்றுகூடிவிடுவதும் வரலாற்று அறிவு படைத்தோர் தெரிந்துகொண்டிருக்கக்கூடியவையாகும்.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்று நாம் கூறுவது 'பல்வேறு இந்திய சகோதர தேசிய இன மக்களிடையே பிளவு உண்டுபண்ணுவதாகும்' என்று சில 'முற்போக்காளர்கள்' குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் அறியாததல்ல—'இந்தியா' என்ற அரசியல் அமைப்பிற்குள் வாழும் மக்கள் அனைவரும், வரலாற்று ரீதியாக ஒன்றுபட்டவர்கள் அல்லர்—என்ற உண்மையை!

அசைக்க முடியாத வரலாறு ஆதாரங்களையும், நடைமுறை வாழ்க்கை அம்சங்களையும், இன்ன பிறவற்றையும் காட்டி—திராவிடர் தனி இனத்தவர்; அவர்கள் மொழியால், சிந்தனை வழியால், பண்பாட்டால், கலையால், பழக்க வழக்கங்களால், நடையுடை பாவனைகளால், வடநாட்டவரிலிருந்து வேறுபட்டவர்கள்—என்ற உண்மையை எடுத்துக் காட்டி, 'அவர்கள், தங்களுக்குரிய அரசியல் விடுதலையைப் பெறுவதின் மூலம், உரிமைகளும், வளங்களும் மிகுந்த நிரந்தரமான நல்வாழ்வு பெற வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறோம்.

நாம் துவக்கத்தில் கூறியுள்ளபடி 'இந்தியா' முழுமையிலும் வாழும் மக்கள், இதயபூர்வமாகப் பன்னெடுங்காலமாய் ஒன்றுபட்டு வாழ்ந்தவர்கள் என்றால், அவர்களிடையே 'பிளவு' உண்டுபண்ணிவிடுவது, நம்மால் சுலபத்தில் ஆகக்கூடியதல்ல.

'இந்தியா' முழுமையிலும் வாழும் மக்கள் ஒரே பண்பாடு கொண்டவர்கள் அல்லர்—என்ற உண்மையை மறைத்துவிட முயற்சித்தவர்கள் எல்லாம் தோல்வியே கண்டிருக்கின்றனர்.

'எல்லோரும் இந்திய மக்கள்—பாரத புத்திரர்கள்' என்பது, வெறும் கற்பனை என்ற உண்மையை வடநாட்டுத் தலைவர்கள் அடிக்கடி பேசுகிற 'ஒற்றுமை' உள்ளடக்கிக் கொண்டிருக்கவில்லையா?

பண்டித நேரு பஞ்சாபில் பேசும்போது, இந்தியாவின் ஒற்றுமை குறித்து குறிப்பிட்டிருக்கிறார்—'நிலப் படத்தில் மட்டும் இந்தியாவின் ஒற்றுமை இருப்பதை நான் விரும்பவில்லை; எல்லா மக்களின் இதயபூர்வமான ஒற்றுமை வேண்டுமென நான் விரும்புகிறேன்,' என்று!

முன்பொருமுறை தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார்—'இந்தியாவில் மக்களிடையே உணர்வு பூர்வமான 'ஒற்றுமை' இல்லை; இருப்பதெல்லாம், பலமான—உறுதியான மத்திய ஆட்சியின் மூலம் நிலைநாட்டப்படும் 'அரசியல் ஒற்றுமை' தான்'—என்று!

இப்போது, அதே கருத்தை வேறு சொற்களால் கூறியிருக்கிறார்—'நிலப்பட ஒற்றுமை தான் இருக்கிறது'—என்று!

இருக்கிற 'அரசியல் ஒற்றுமை—நிலப்பட ஒற்றுமை' தென்னாட்டவரை — திராவிடரை வடவருக்கு அடிமைகளாக்கி வைத்திருக்கிறது என்பதால்தான், நாம், அந்த அரசியல் ஒற்றுமையை உருக்குலைத்து; 'திராவிட நாடு, திராவிடருக்காக வேண்டும்'—என்று கோருகிறோம்.

பண்டித நேருவோ, அந்த 'நிலப்பட ஒற்றுமை' நீடிப்பதில் தனது மக்களுக்கு நன்மை இருக்கிறது—இலாபம் உள்ளது என்பதால், அதனை நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

அதற்கு, 'வேறுபாடுகள் இருக்கலாம்; அதை எல்லாம் விட்டுவிட்டு, எல்லோரும் ஒன்றுபடுங்கள்; இதயபூர்வமாக ஒற்றுமையை உருவாக்குங்கள்,' என்று உபதேசிக்கிறார்.

வேறுபாடுகள் இருப்பதை ஏற்றுக்கொள்ளும் நேரு, அதே நேரத்தில், சில சரித்திரப் புரட்டுக்களையும் செய்யத் தவறுவதில்லை; முன்னுக்குப்பின் முரண்படப் பேசுவதில்தான் அவர் வல்லவராயிற்றே!

எப்படியோ, 'இந்தியா'வில் வாழும் மக்களிடை இதயபூர்வமான ஒற்றுமை இல்லை என்ற உண்மையையேனும் அவர் ஒப்புகிறார்!

அந்த உண்மையை மறைத்துவிட நினைப்பவர்களுக்கு நினைவூட்டவே, பண்டிதரின் உபதேசங்களும், புரட்சிகளும், முரண்பாடுகளும் பயன்படும்.

வெள்ளையரின் நிறவெறி

தெ. ஆ. பெண்கள் எதிர்ப்பு ஊர்வலம்

ஜோஹனஸ்பர்க், நவ. 13—

புதிய 'செனட்' சட்டம் ஒன்றை எதிர்த்து, ஏராளமான பெண்கள் தென்னாப்பிரிக்காவின் முக்கியமான நகரங்களில் எல்லாம் ஒரு பெரும் அணிவகுப்பு நடத்தியிருக்கின்றனர்.

அரசியல் சட்டம் 'செத்துப் போய்'விட்டதற்கு வருத்தம் தெரிவிப்பதற்கு அறிகுறியாக அந்தப் பெண்கள் கருப்புத்துணி அணிந்து ஊர்வலம் வந்திருக்கின்றனர்.

மக்கள் சபையின் கடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டம் மேல்சபையில், செனட்டர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்கிற்கும் அதிகமாக்குவதின் மூலம் தேசீய சர்க்காருக்கு, இஷ்டப்படி நடந்து கொள்வதற்குத் தேவையான மூன்றில் இருபங்கு பெரும்பான்மையைத் தருகிறது.

மேலும், பொது வாக்காளர் பட்டியலிலிருந்து வெள்ளையரல்லாதவர்களின் பெயர்களை நீக்குவதற்கு அந்தச் சட்டம் வழி செய்வதாகக் கூறப்படுகிறது.

ஊர்வலமாக வந்த பெண்கள் பின்னர் கூட்டம் ஒன்று நடத்தியிருக்கின்றனர்.

'துரோகிகள் வெளியேறட்டும்'

பாக். கவர்னர்-ஜெனரல் எச்சரிக்கிறார்

"நாட்டில் சில துரோகிகள் இருக்கிறார்கள்; வெளிநாட்டினரின் தூண்டுதலின் மீது இவர்கள், நாட்டின் ஒற்றுமையைச் சீர்கேடுறச் செய்வதற்கு முயற்சிக்கிறார்கள்; வேண்டுமானால், இவர்கள் தங்களுக்கு விருப்பமான வேறு நாட்டிற்குப் போவதை எவரும்தடுக்கவில்லை; ஆனால், ஒருதடவை இங்கிருந்து சென்றுவிட்டால், பிறகு திரும்பிவர முடியுமென்று கனவுகூடக் காணவேண்டாம்," என்று, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் இஸ்கந்தர் மிர்சா, குவெட்டாவில் நடைபெற்ற மலைசாதியினர் கூட்டமொன்றில் எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தானின் அரசியல்

இஸ்லாமிய தத்துவப்படி அமைய வேண்டுமாம்

இஸ்லாம் தத்துவத்தில் பாகிஸ்தானின் எதிர்கால அரசியலை அமைக்க வேண்டுமென்றும், மத்திய சர்க்காருக்கு அதிக அதிகாரம் அளித்து பலமுள்ளதாக ஆக்க வேண்டுமென்றும் ஆளும் முஸ்லிம் ஐக்கிய முன்னணி கூட்டு பார்லிமெண்டரி கட்சி முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது

மதுவிலக்கு விசாரணைக் குழு சிபாரிசுகள்

திட்டக் குழுவின் நிலை என்ன?

மதுவிலக்கு விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் பற்றி திட்டக் குழு இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை எனத் தெரிகிறது.

தீவிர நாகர்களை அடக்க: ஆயுதந் தரித்த போலீசார் விரைகின்றனர்

ஷில்லாங், நவ. 12—

நாகமலையிலிருந்து ஏராளமான நாகர்கள், நவீன ஆயுதங்களுடன் ஆங்காங்கே உள்ள மக்களைத் தாக்கிக் கொள்ளையிடப் புறப்பட்டிருப்பதாகக் கூறிக்கொண்டு, அசாம் சர்க்கார், விசேட ஆயுதந்தரித்த போலீஸ் கோஷ்டிகளை அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

சர்க்காரின் துப்பறியும் இலாகாவினர் நாகர்கள் நவீன கால ஆயுதங்களுடன், குகைப் பாதைகள் வழியாக மலையிலிருந்து இறங்கி வந்துகொண்டிருப்பதாகத் தகவல் சேகரித்திருக்கின்றனராம். நாகர்கள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிற சிகசாகர் மாவட்டத்தில் போலீசார் உஷார்படுத்தப்பட்டிருக்கின்றனராம்

ஷில்லாங்கிலிருந்தும், கௌஹாத்தியிலிருந்தும் ஏராளமான போலீசார் இந்த மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றனராம்.

ஆயுதந்தரித்த நாகர் கோஷ்டியினர் நாகர் தேசிய கவுன்சிலைச் சேர்ந்த தீவிரவாதிகளாயிருக்கக் கூடும் எனக் கூறப்படுகிறது.

டில்லியில் 'மேனன்'கள் 'படையெடுப்பு'!

புதுடில்லி, நவ. 13—

இந்திய வெளி விவகார இலாகாவில் உள்ள 'மேனன்'கள், இப்போது தலைநகரான டில்லியில் குவிந்திருக்கின்றனராம்.

சோவியத் ரஷ்யாவில் தூதுவராயிருக்கும் கே. பி. எஸ். மேனன் டில்லி வந்து, ரஷ்யத் தலைவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்து வருகிறார்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் தூதுவராயிருக்கும் பி. கோபால மேனன் ஆலோசனைக்காக டில்லி வந்துள்ளாராம்.

சயாமில் தூதுவராயிருக்கும் பி. அச்சுதமேனன்கூட ஆலோசனைக்காக டில்லி வந்திருக்கிறார்.

கூட்டம் ஒன்றில் ஒரு உயர்தர ஐ. சி. எஸ். அதிகாரி, வெளி நாடுகளில் உள்ள 'மேனன்'கள், இப்போது டில்லியில் வட்டமிடுவதாகக் குறிப்பிட்டபோது, ஒரு மேனன் எழுந்து, 'இல்லை; கிருஷ்ணமேனன் இன்னும் நியூயார்க்கில்தான் இருக்கிறார்' என்று குறிப்பிட்டாராம்!

போலந்து தலைநகரில் பர்மியப் பிரதமர்

லண்டன், நவ. 13—

பர்மியப் பிரதமரான யூ-நு, இப்போது போலந்து தலைநகரான வார்சாவில் தங்கியிருப்பதாயும், நகரை இன்று அவர் சுற்றிப் பார்த்ததாயும், நகரில் உள்ள கலாச்சாரக் கலை மாளிகையை அவர் கண்டதாகவும் வார்சா வானொலி தெரிவித்திருக்கிறது.

போலந்து நாட்டின் அரசாங்கத் தலைவர், யூ-நு தம்பதிகளுக்கு விருந்து நடத்தியதாயும் கூறப்பட்டது.

ரஷ்ய - சீன முறைகள்

'அவைகளை பின்பற்றவேண்டுவது முட்டாள்தனமாகும்!'

பண்டித நேரு கூறுகிறார்!

அலிகார், நவ. 13—

"மார்க்ஸ், லெனின் போன்ற திறமையான தலைவர்களின் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் இந்திய மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும், ரஷ்யா, சீன நாடுகள் சென்ற வழியில் இந்தியா செல்ல வேண்டும் என்றும் சிலர் விரும்புகின்றனர்.

"அத்தகு புரட்சிகளையும், எதிர்ப் புரட்சிகளையும், இதர துயரங்களையும் இன்று நாம் அனுபவிக்க வேண்டும் என்று எவரும் விரும்பமாட்டார்கள்;

"எனவே, இந்தியாவைத் திருத்தி அமைக்க ரஷ்யா, சீன நாடுகள் பின்பற்றிய வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவது முட்டாள்தனமானதாகும்"

என்று, அலிகார் பல்கலைக் கழக மாணவரிடை பேசுகையில் பிரதமர் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

"மாணவர்கள் சிக்கல்களைப் புரிந்துகொண்டு, தெளிவாகச் சிந்தித்து, நாட்டு நலனுக்கு தங்கள் பங்கினைச் செலுத்தத் தயாராயிருக்க வேண்டும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'சிறைக்கூடங்களே சிறந்த இடம்'

"சிந்திப்பதற்கும், படிப்பதற்கும் சிறைக்கூடமே சிறந்த இடம்," என்று பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழக மாணவர்களிடை பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

'நான், பத்து சதவிகிதக் கல்வி தான் பல்கலைக் கழகத்தில் பெற்றேன்; 90 சதவிகிதக் கல்வியை கழகத்திற்கு வெளியே பெற்றேன். சிறைக் கூடங்களில், நன்றாகப்படித்து என்னை தயாரித்துக்கொள்ள எனக்கு நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. படிக்கவும், சிந்திக்கவும் சிறைக்கூடத்தைக் காட்டிலும் வேறு நல்ல இடங்கள் இல்லை. இதனால், நீங்கள் எல்லோரும் உங்கள் கல்வியைப் பெறுவதற்கு சிறைக்கூடம் செல்ல வேண்டும் என்று நான் கூறுவதாக எண்ணவேண்டாம்."

ஆருடக்காரர்கள் மீது நேரு 'தாக்குதல்'

அமிர்தசரஸ், நவ. 13—

"கவலையுற்றிருக்கும்போது மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டிய சோதிடர்கள், தங்களிடம் வருவோர் மீது கடவுள் அதிருப்தி கொண்டிருப்பதாகக் கூறி, மேலும் அவர்களைத் துயருறச் செய்கின்றனர்",

என்று, பண்டித நேரு கண்டனம் தெரிவித்தாராம்.

பஞ்சாபில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமை, கடவுள் இந்தப் பகுதி மக்களின்மீது கோபம் கொண்டிருக்கிறார் என்பதன் அறிகுறி—என்று, கியானி குருமுக்சிங் முசாபீர் என்பார் கூறினாராம். இதனை தான் ஒப்புவதற்கில்லை என்றும். ஒரு நாட்டின் மக்கள் எவ்வளவு பெரிய அழிவையும் துணிவுடன் எதிர்த்துச் சமாளிக்கவல்லவர்கள் என்றும் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

ஐ. நா. உணவு விவசாய நிறுவனத் தலைவர்

விலகி விடுவதாக அச்சுறுத்தல்

ரோம், நவ. 13—

ஐ. நா. உணவு, விவசாய நிறுவனத்தின் தலைவர், நிறுவனத்தின் வரவு-செலவுத் திட்டத்தின் மதிப்பீட்டைக் குறைக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் முடிவு செய்தால், தான் பதவியைவிட்டு விலகிவிடுவதாக அச்சுறுத்தியிருக்கிறார்.

18,000 டாலர் (சுமார் 80,000 ரூபாய்) ஆண்டுதோறும் அவருக்குச் சம்பளம் கிடைக்கிறது.

டாக்டர் பிலிப காடன் என்ற அந்தத் தலைவர், நிறுவனத்தின் செலவுக்கு 70,00,000 டாலர் ஒதுக்க வேண்டும் என்று கேட்டார். ஆனால், அமெரிக்காவும், பிரிட்டனும் சேர்ந்து 6 இலட்சம் டாலர் அதில் குறைக்க வேண்டும் என்று கோரின ஆனால், இந்தியா, நெதர்லாந்து ஆகிய நாடுகள், செலவைக் குறைப்பதை எதிர்த்தன.

அப்போதுதான் டாக்டர் காடன், தனது திட்டத்தைக் குறைத்தால்தான தொடர்ந்து பதவியில் நீடிக்க முடியாதெனவும். ஐ. நா. உறுப்பினர்கள் வேறு தகுதியுள்ள நபரைத் தேடிக்கொள்ளலாம் எனவும் கூறியிருக்கிறார்.

உடனே இறுதி முடிவு மேற்கொள்ள 15 நாட்களுக்கும் பிறகு மீண்டும் கூடுவதென ஐ. நா. உறுப்பினர்கள் முடிவு செய்து; கூட்டத்தைக் கலைத்திருக்கின்றனர்.

தமிழ்நாடு கம்யூனிஸ்டுகள் நிலைமை என்ன?

மொழிவழிமாநிலம் என்றகொள்கை என்னவாயிற்று?

இடத்திற்கு இடம் முரண்படும் போக்கு!

எர்ணுகுளம், நவ. 13—

தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களை கேரளத்திலிருந்து பிரித்து சென்னையுடன் இணைத்தால், அதனை எதிர்த்துப் போராடி உயிரைத் தியாகம் செய்யவும் தயாராயிருப்பதாக, திரு-கொச்சி சட்டசபையில் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக யிருக்கும் டி. வி தாமஸ் பேசியிருக்கிறார்.

"இந்த இரண்டு தாலுகாக்களும் இல்லாத கேரளம் உபயோகமில்லாததாயிருக்கும்; இந்தத் தாலுகாக்களில்தான் சில முக்கியமான அபிவிருத்தித் திட்டங்கள் அமைந்திருக்கின்றன; இங்குதான் மாநிலத்தில் உள்ள முக்கியமான நதிகள் உற்பத்தியாகின்றன; எனவே, இந்த இரு தாலுகாக்களும் சென்னைக்குத் தரப்பட்டால் கேரள மக்கள் வாளாவிருப்பர் என்று சர்க்காரும், காங்கிரசும் எண்ண வேண்டாம்,"

என்றும், அவர் பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டாராம்!

★

'ஏமாற்றத்தையே விளைவிக்கிறது'

'நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்'

ஏ. நேசமணி கருத்து

திருவனந்தபுரம், நவ. 11—

"இதுவரையில், சட்ட பூர்வமான முறைகளையே மேற்கொண்டு வந்திருக்கிறோம்; இந்த முறைகள் வெற்றிபெறுவிட்டால், திரு-கொச்சி தமிழர் கோரிக்கைப் பிரச்சினையில் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்யவேண்டியிருக்கும்; தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்படும் என்றே நினைக்கிறேன்,"

என்று, ஏ. நேசமணி அவர்கள் கூறிவிட்டு மேலும் சொன்னார்:—

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களை சென்னை மாநிலத்துடன் இணைக்கும் பிரச்சினை ஒரு குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டிருப்பது, திரு-கொச்சி தமிழர் காங்கிரசுக்கு ஏமாற்றத்தையே விளைவித்திருக்கிறது.

"இது பற்றி ஒரு முடிவான தீர்மானத்திற்கு வருவதற்கு வேண்டிய தகவல்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டி முன்பு வைக்கப்பட்டிருந்தன; ஆனால், இதை ஒரு குழுவின் பரிசிலனைக்கு விடுவதென்ற முடிவு கவலையளிப்பதாகவே இருக்கிறது."

★

புதிய மாநில அமைப்புத் திட்டம்

சர்க்கார் ஊழியர் நிலை

சென்னை சர்க்காரின் பல இலாகாக்களிலும் எத்தனை மலையாளிகள், கன்னடியர் இருக்கின்றனர் என்று சென்னை சர்க்கார் கணக்கெடுப்பதாகத் தெரிய வருகிறது.

மாநில புது அமைப்புக் குழுத் திட்டப்படி தயாராகும் மாநிலப் புது அமைப்புத் திட்ட மசோதா தயாரிக்கப்படும்போது — ஆந்திர மாநில சட்டம் தயாரிக்கப்பட்ட போது போன்று, சர்க்கார் ஊழியர்களை மாற்றி அமைத்துக்கொள்ளும் பிரிவு ஒன்றும் அதில் இடம் பெற வேண்டும் என்று இருக்கிறது.

ஆந்திரா பிரிவினையின்போது, மொழி அடிப்படையை மட்டும் கொண்டு ஊழியர்களைப் பிரித்தது போல் இந்த முறை ஊழியர்களைப் பிரிப்பது இயலாததாகும் என்று கூறப்படுகிறது.

'தனி மைசூர்'

கோரிக்கைக்குக் கண்டனம்

ஹூப்ளி, நவ. 11—

'மைசூர், மைசூர்வாசிகளுக்கே' என்று சிலர் கோஷமிடுவது குறுகிய மனப்பான்மை கொண்டது; தீங்கு பயப்பது—என்று, குருபாதசாமி எம்.பி., கண்டித்திருக்கிறார்.

'ஒரு ஆந்திரம், ஒரு மராட்டியம் என்று பேசப்படும்போது, மைசூர் தனியாக—இரண்டாவது மாநிலமாக இருக்க வேண்டும் என்று கோருவதை இனியாவது மைசூர் தலைவர்கள் கைவிட வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூர் முதல் மந்திரி அனுமந்தையா இது குறித்து கண்டிப்பாக நடந்துகொள்ளாததையும் தோழர் குருபாதசாமி கண்டித்திருக்கிறார்.

★

மீண்டும் தகராறு?

சென்னையைத் தனி மாநிலமாக்க வேண்டுமாம்!

தாடேபல்லிக்கூடம், நவ. 13—

"சென்னை நகரைத் தனி மாநிலமாக அமைக்க வேண்டும்; காங்கிரஸ் செயற் குழுவினர், பம்பாயைத் தனி மாநிலமாக்குவதற்கு என்னகாரணம் கூறுகின்றனரோ, அதுவேசென்னைநகருக்கும் பொருந்தும் என்பதால் மத்திய சர்க்கார் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்,"

என்று ஆந்திர மாநில பிரஜா கட்சியின் செயற் குழு, தனது இன்றையக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றதாம்.

'பம்பாய், சென்னை குறித்து தார் குழு அறிக்கையின் சிபாரிசுகளை, இந்தியப் பேரரசு மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும்' என்றும் அவர்கள் தீர்மானம் கூறுகிறதாம்.

அந்தக் கூட்டத்திற்குத் தோழர் தென்னெட்டி விசுவநாதம் தலைமை தாங்கினாராம்.

இந்தோனேஷிய குடியரசை கவிழ்க்க சதி!

தலைவர் சுகர்ணோ கவலை

ஜகார்தா, நவ. 11—

இந்தோனேஷிய குடியரசு ஆட்சியைக்கவிழ்க்க நடைபெற்ற சதித்திட்டங்கள் பற்றிய தஸ்தாவேஜுகள் தம்மிடம் சிக்கியிருப்பதாக தலைவர் சுகர்ணோ தெரிவித்திருக்கிறார்.

யாரோ சிலர் (யாரென்று அவர் விளக்கம் தரவில்லை) இந்தோனேஷியாவிற்கு வெளியிலிருந்து அந்த முயற்சியில் ஈடுபட்டதாயும், ஆனால், அது முடியாது போய்விடவே அந்த தீயோர்கள் இப்போது உள்நாட்டிலிருந்தே அந்த வேலையில் ஈடுபட்டிருப்பதாயும், கூட்டம் ஒன்றில் அவர் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவிற்கு 2,000 வாகன்கள்

ஆஸ்திரேலியாவும் விநியோகம் செய்யுமென அறிவிப்பு

ரூ. 950 லட்சம் பெறுமான சாமான்களும் அளிக்க ஒப்புக்கொண்டதாம்!

கொழும்பு திட்டப்படி ரூ. 950 இலட்சம் மதிப்புள்ள சாமான்களை இந்தியாவுக்கு விநியோகம் செய்ய ஆஸ்திரேலியா ஒப்புக்கொண்டதாம். இதில் ரூ. 450 இலட்சம் மதிப்புள்ள சாமான்கள் ஏற்கனவே இந்தியாவுக்குக் கிடைத்துவிட்டதாகவும் இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய ஹை கமிஷனர் சென்னையில் கூறியுள்ளார்.

2,000 இரயில்வே வாகன்களும், 24 டீசல் எஞ்சின்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும், இவற்றுடன் அகில இந்திய வானொலி நிலையத்திற்குத் தேவையான சில இயந்திரச் சாதனங்களும் இந்தியாவுக்கு விரைவில் அனுப்பப்படும் என்றும் குறிப்பிட்டார்.

தற்பொழுது இந்தியாவில் ஏற்பட்டுள்ள வாகன் பற்றாக்குறை இந்த 2,000 வாகன்கள் விநியோகத்தின் மூலமாக ஓரளவு தீர்ந்துவிடலாம் என்றும் அவர் கூறினார்.

செய்திப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்

ரூ. 125 கோடியாகக் குறைந்தது

புதுடில்லி, நவ. 13—

இந்திய செய்திப் போக்குவரத்து இலாகாவின் இரண்டாம் திட்டம் ரூ 125 கோடி என்று திட்டக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுவிட்டதாம்.

இதுபற்றிக் குறிப்பிட்ட இலாகா மந்திரி ஜெகஜீவன்ராம், திட்டக் குழுவின் முடிவு தனக்கு ஆச்சரியமளித்ததாகக் கூறியிருக்கிறார்.

முதலில் இலாகா, ரூ. 153 கோடி பெறுமான திட்டம் தயாரித்தது.

திட்டக் குழுவினருடன் பூர்வாங்கப் பேச்சுக்கள் முடிந்ததும் இது ரூ. 142.73 கோடியாகக் குறைக்கப்பட்டது; 'இனியும் திட்டம் வெட்டப்படமாட்டாது என்று நம்பியிருந்தோம்' என்றும், ஆனால், திட்டக் குழுவினர், ரூ. 125 கோடியாகச் சுருக்கிவிட்டது ஆச்சரியமாயிருக்கிறது என்றும் மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

நால்வர் மாநாடு தோல்வி

ஜினீவா, நவ. 14—

ஜெர்மன் ஐக்கியம், ஐரோப்பியப் பாதுகாப்பு, ஆயுதப் பரிகரணம், கிழக்கு மேற்கு நாடுகளின் தொடர்புகளை அதிகரித்தல் ஆகிய எல்லா சிக்கல்களிலும் தீர்வு எதும் காண இயலாது நான்கு வல்லரசு வெளி விவகார இலாகா மாநாட்டில் முட்டுக்கட்டை ஏற்பட்டுவிட்டது.

மாநாடு முடிய இன்னும் மூன்று நாட்கள் மட்டுமே இருக்கின்றன; ஆனால், மாநாட்டில் எந்தவித உடன்பாடும் ஏற்படுவதற்கில்லை என்றும் கூறப்படுகிறது.

அடுத்த கோடையில் மீண்டும் ஒரு மாநாடு கூட்டி, ஜெர்மன் ஐக்கியம் குறித்து ஏதேனும் முடிவு காண முயற்சிக்கலாம் என்று மேற்கு நாட்டவர் கருதுகின்றனராம்.

இந்தி திணிக்கப்படவில்லையா?

புதுடில்லி, நவ. 13—

இரயில்வே இலாகாவில் உத்தியோகம் தேடுவோர், வேலைக்காகப் பயிற்சி பெறும்போது, இந்தியில் ஒரு பரீட்சை எழுதித் தேற வேண்டும் என்று, இரயில்வே போர்டு உத்தரவிட்டிருக்கிறதாம்.

இந்தி வழங்காத பகுதிகளில் உள்ள இரயில் வேலைப் பயிற்சி பள்ளிகளில் இந்தி மொழி போதிக்க ஆசிரியர்களை நியமிக்கவும் அந்த போர்டு' அனுமதி தந்திருக்கிறதாம்!

கழகச் செய்திகள்

கடலூர் நகர தி.மு.கழகம்

1—11—55 இரவு 9 மணியளவில், கடலூர் நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், நகர தி.மு. கழக அலுவலகத்தில் நடைபெற்றது. செயலாளர் தோழர் கே. ஜி. சாமிநாதன் பதவி நீக்கத்தையொட்டி, தோழர் கே. இளங்கோ செயலாளராகவும், தோழர் அ. கந்தசாமி துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், வரும் ஆண்டு பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், அதற்குத் தலைவராகத் தோழர் இரா. சாம்பசிவம் (தெ ஆ. மாவட்டச் செயலாளர்) அவர்களும், தோழர் கே. இளங்கோ செயலாளராகவும், தோழர் வை. சரவணன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அத்துடன் பொங்கல் விழாவின்போது பத்து நாட்களுக்குக் கண்காட்சிச் சாலை வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆந்திராவில் கம்யூ. கட்சி ஒழிந்துவிட்டது

சஞ்சீவி ரெட்டி சொல்லுகிறார்

கடப்பை, நவ. 11—

"உண்மையான நண்பர்கள் யார்? தவறான நண்பர்கள் யார்?—என்பதை வாக்காளர்கள் புரிந்துகொண்டுவிட்டனர் என்பதால், ஆந்திர கம்யூனிஸ்டு கட்சி இடம் தெரியாமல் மறைந்துவிட்டது – ஒழிந்துவிட்டது,"

என்று, கூட்டம் ஒன்றில் பேசுகையில், ஆந்திர உதவி முதன் மந்திரி என். சஞ்சீவி ரெட்டி குறிப்பிட்டாராம்.

தாழ்த்தப்பட்டோர் உணவு விடுதிகள்!

புதுடில்லி, நவ. 13—

தீண்டாமையை ஒழிக்கும் நோக்குடன் தாழ்த்தப்பட்டவர்களைக் கொண்டு உணவு விடுதிகள் நடத்துவதற்கு அகில இந்திய சாதி, வகுப்பு ஒழிப்பு சங்கத்தினர் முடிவு செய்திருக்கின்றனராம்.

'அன்னபூரணா' விடுதிகளைப் போன்று இந்த உணவு விடுதிகள் பல முக்கியமான நகரங்களில் எல்லாம் திறக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இந்தச் சங்கத்தை அமைத்தவரான, பின்தங்கிய வகுப்புக் குழுவின் முன்னாள் உறுப்பினரான எஸ். டி. சிங்செளரியா என்பார், இந்த விடுதிகள் முழுவதும் தாழ்த்தப்பட்டவர்களாலேயே நடத்தப்படும் என்றும், இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகச் செலவிடப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

கழிவு மரங்களைப் பயன்படுத்தத் திட்டம்

ரூ. 2 இலட்சம் செலவில் தொழில் நிலையங்கள்

கோவை, நவ. 14—

ஆனைமலையில் உள்ள காடுகளிலிருந்து கிடைக்கும் தேக்குக் கழிவு மரங்களைப் பயன்படுத்துவதற்காக ரூ. 2 இலட்சம் செலவில் இரண்டு மர வேலை நிலையங்களை விரைவில் ஏற்படுத்தப் போவதாக சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளாராம்.

இப்போது, தேக்குக் கட்டைகளின் உச்சிப் பகுதிகள் அறுக்கப்பட்டு வீணாக்கப்படுகின்றன. இவைகளை உபயோகப்படுத்துவதற்காக இரண்டு மரம் அறுக்கும் மில்களும், மரவேலை செய்யும் இயந்திர சாதனங்களும் நிறுவப்படும். இதனருகே பத்து சிறிய நிலையங்களும் நிறுவுவதற்கு ஊக்கமளிக்கப்படும்.

இலங்கை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

30—10—55 காலை 9 மணிக்கு, இலங்கை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கொள்ளுப்பிட்டி பஸ் நிலையத்தருகிலிருக்கும் மார்சல் ஆரம்பப்பள்ளியில், துணைச்செயலாளர் தோழர் அ.ம. அந்தோணிமுத்து தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், அண்மையில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக மாநில மாநாட்டுக்கு பிரதிநிதிகளை அனுப்பும் அதிகாரத்தை இலங்கைப் பொதுச் செயலாளருக்கு அளித்தும், இலங்கையில் முக்கிய கட்டத்தில் உள்ள மொழிப் பிரச்சினை பற்றிய தனி மாநாடு நடத்துவதெனவும், அதில் கலந்து கொள்ள திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

திருவத்திபுரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

6—11—55 மாலை, திருவத்திபுரம் பெரியார் திடலில், தி. மு. கழகக் கிளைச் சார்பில், தோழர் வி. குட்டியப்பன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். வான்மதி, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி ஆகியோர் பேசிய பின், தோழர் சி. பி சிற்றரசு அவர்கள் 'கடவுள் எங்கே?' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். தோழர் சி. பி. சிற்றரசு அவர்கட்கு தி. மு. கழகக் கிளையின் சார்பிலும், தி. மு. க. இளைஞர் நாடக மன்றத்தின் சார்பிலும் கைத்தறித் துணிகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

திருவெண்காடு தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

7—11—55 மாலை 6 மணிக்கு மேலவீதியில் தோழர் சீ. கேசவன் தலைமையில் கிளைக் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் என். கிட்டப்பா, கே. எஸ். செளந்தரராசன், சி. ஜம்பு ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசிய பின்னர், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குத் திருவெண்காடு தி. மு. கழகத்தின் சார்பாக வரவேற்பு மடல் வாசித்தளிக்கப்பட்டபின், பொதுச் செயலாளர் அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, இன்றைய அரசியல் நிலைகுறித்தும், திராவிட நாட்டுப் பிரிவினை குறித்தும் விளக்கவுரையாற்றினார்.

மாநில மாநாட்டு நிதிக்காகத் திருவெண்காடு தி. மு. கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர் அவர்களிடம் ரூ. 21 தரப்பட்டது.

பாப்பாரப்பட்டி தி. மு. க.

5—11—55ல், தோழர் இராசகோபால் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், செயலாளர் தோழர் ப. செ. சஞ்சீவனின் விலகலை ஏற்றுக்கொண்டும், அவருக்குப் பதிலாகத் தோழர் பி. எஸ். முருகேசனைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டதுடன், இவ்வூரை அடுத்த பாலக்கோட்டிற்கு அண்ணா அவர்கள் விரைவில் வரவிருப்பதை யொட்டி அக்கிளைக் கழகத்திற்கு ரூ. 20 கொடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கொழும்பு தி. மு. கழகம்

6–11–55 கொழும்பு (இலங்கை) தி. மு கிளைக் கழகச் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம், கிளைக் கழகப் பணிமனையில், தோழர் எம். முக்தார் தலைமையில் நடைபெற்றபோது, நவம்பர் இறுதியில், தோழர் தில்லை-வில்லாளன் அவர்களைக் கொண்டு ஆண்டு விழாவை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

ஒரு கண்ணோட்டம்

சென்னை, நவ. 15—

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் சென்னை நகரில்—வண்டலூர், என்னூர், சைதாப்பேட்டை உட்பட்ட பிரதேசத்தில் நவ. 14-ந் தேதி முதல் அமுலுக்கு வந்துவிட்டது. 300 தொழிற்சாலைகளில் பணியாற்றும் 1,000 பெண் தொழிலாளர் உட்பட 48,000 தொழிலாளர்கள் இதன் மூலம் பயனடைவர் என்று கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் மருத்துவ மனைகளில், தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்கும். அவசியமான காலத்தில் மருத்துவ மனையிலும், இல்லத்திலும் சிகிச்சை உதவி அளிக்கப்படும்.

விலை உயர்ந்த மருந்துகளும், எக்ஸ்ரே, இரத்தப் பரிசோதனை ஆகிய வசதிகளும், மற்றும் எல்லா மருத்துவ உதவிகளும் அவசியமானபோது அளிக்கப்படும். இன்ஷ்யூர் செய்துகொண்டவர்களுக்கு இவ்வசதிகள் இலவசமாகக் கிடைக்கும்.

நோயுற்ற காலம், பிரசவகாலம், ஊனமடைந்த காலம்—இவற்றின் போது ரொக்க உதவி கிடைக்கும். பணியாற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில் மரணம் சம்பவித்தால், குடும்பத்தினருக்கு ரொக்க உதவி தரப்படும்—அதாவது, நான் வருமானத்தில் 55 சதவிகிதம் ரொக்க உதவியாகக் கிடைக்கும். (இது பற்றிய முழு விவரங்கள் ஏற்கனவே 'நம் நாடு' இதழில் வெளியாகியுள்ளது.)

சென்னையில் மருத்துவ மனைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் மருத்துவ மனைகளில் வைத்திய வசதிகள் அளிக்கப்படும். இன்ஷ்யூரன்ஸ் செய்துகொண்ட தொழிலாளர்கள், இவற்றில் ஏதேனும் ஒரு மருத்துவ மனையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் :—

முழு நேர மருத்துவ மனைகள்:-

1. கொண்டித்தோப்பு
2. துறைமுகப் பிரதேசம்
3. செம்பியம்
4. கீழ்ப்பாக்கம்
5. எழும்பூர்
6. இராயப்பேட்டை
7. மைலாப்பூர்
8. சைதாப்பேட்டை
9. பல்லாவரம்
10. திருவொற்றியூர்
11. பெரம்பூர்

இத்திட்டத்தின்கீழ் சென்னைப் பிரதேசத்தில் வரும் கைத்தொழில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கீழே தரப்படுகிறது :—

கைத் தொழில்	தொழிற் சாலைகள்	தொழிலாளர்கள்
துணி ஆலை	1	15,000
அச்சகம்	65	7,500
மோட்டார்	28	4,000
பட்டறைகள்	18	3,000
தீக்குச்சு	1	2,000
எண்ணெய், சோப்பு, டாய்லெட்	15	1,800
பெட்ரோல், எண்ணெய்	8	1,800
தோல் பதனிடுதல்	5	1,800
சினிமாப் பட உற்பத்தி	14	1,600
எஞ்சினியரிங்	12	1,500
வார்ப்புக்கூடம்	18	1,500
இரசாயனப் பொருள்கள்	10	900
நகைகள்	7	600
இதர கைத் தொழில்கள்	93	5 000
	300	48,000

★

இராசேந்திரரின் துவக்க உரை

இத் திட்டத்தைக் குறித்த குடியரசுத் தலைவர் இராசேந்திரர் குறிப்பிட்டதாவது :

"இத் திட்டத்தினால் என்ன நன்மை என்பது பற்றிய தகராறுகள் ஓய்ந்துவிட்டன. இந்த விஷயத்தில் சர்க்கார் முன்னெச்சரிக்கையுடன்தான் நடந்துகொண்டிருக்கின்றனர். ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் இதை அமுல் நடத்துவதற்குப் பதிலாக, படிப்படியாகத்தான் அமுல் நடத்துகின்றனர். இதனால் கிடைக்கும் அனுபவம் மிகவும் உதவியாயிருக்கும் இந்த அனுபவத்தின் பலனாக இந்தியாவில் உள்ள 12 ஆயிரம் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 20 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்துவது சாத்தியமாயிருக்கலாமென்று நம்புகிறேன்.

"செல்வத்தை உற்பத்தி செய்பவர்கள் தொழிலாளர்கள். ஆகவே, அவர்களுடைய நலன்கள் தொழிலதிபர்களுக்கு மட்டுமின்றி, சர்க்காருக்கும்கூட முக்கியமானதாகும். இந்தச் சட்டத்திலுள்ள அம்சங்கள் புதியவையல்ல. தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் நோய் வாய்ப்பட்டால், அல்லது வேலை செய்து கொண்டிருக்கும்போது ஏற்படும் விபத்து காரணமாக வேலை செய்யும் சக்தியற்றவர்களாகிவிட்டால், அவர்களுக்குச் சில வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்ற கொள்கை நீண்டகாலமாக ஒப்புக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இதற்காகத்தான் பிரசவம், நஷ்ட ஈடு ஆகியவைகளுக்கு வசதி செய்வதற்கு சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்தச் சட்டங்களின் கீழ் தனிப்பட்ட தொழிலதிபர்கள் இந்த உதவிகளைச் செய்ய வேண்டியிருந்தன. அந்தப் பொறுப்பு இப்போது அவர்களிடமிருந்து மாற்றப்படுகிறது. இதனால் தொழிலதிபர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றாமல் தட்டிக் கழிக்க இடமில்லாமல் போய்விடுகிறது. பழைய சட்டங்களின்படி மொத்தமாக ஒரு தொகை கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பதிலாக இனி 'பென்ஷன்' கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. புது திட்டத்தின் கீழ் நோய்வாய்ப்பட்டிருப்பவர்களுக்கு லீவு அனுமதி கொடுக்க வேண்டுமென்பதும் கட்டாயமாக்கப்படுகிறது."

பண்டித நேருவின் 66-வது பிறந்த நாள் விழா

உலகெங்கணுமிருந்தும் வாழ்த்து

புதடில்லி, நவ. 14—

இன்று இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு தமது 66-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினார்.

ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் அவரது இல்லத்தின்முன் கூடி தங்களின் வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டனர்.

பண்டித நேரு நீடூழி வாழ வேண்டுமென விழையும் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் உலகின் பல பாகங்களிலிருந்தும், அமெரிக்கத் தலைவர் ஐசனோவர், ரஷ்யப் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ்; வியட்நாம் தலைவர் டாக்டர் ஹோ-சி-மின், யூகோ தலைவர் டிட்டோ உள்ளிட்ட பலரிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன.

சேலம் மாவட்டத்தில் அண்ணுதுரை

சுற்றுப்பயணம்

✯

20—11—55 காலை : சேலம் நகரம்—சிறப்புக் கூட்டம் ;
மாலை : ஒய்.எம்.சி.ஏ. திடலில் கல்லூரி மாணவர்கள் வரவேற்பு ;
இரவு : பொதுக்கூட்டம்

21—11—55 காலை : மோரப்பூர்—திருமணம் ;
மாலை : எடப்பாடி—பொதுக் கூட்டம் ;
இரவு : திருச்செங்கோடு—பொதுக்கூட்டம்; மேட்டூர் அணை—நாடகத் தலைமை

22—11—55 மாலை : பாண்டமங்கலம் — பொதுக்கூட்டம்;
இரவு : நாமக்கல்—பொதுக் கூட்டம்

23—11—55 காலை: நீர்முள்ளிக் குட்டை—பொதுக் கூட்டம் ;
மாலை : ஆனையாம்பட்டி—பொதுக்கூட்டம் ;
இரவு : ஆத்தூர்—கே.ஆர்.ஆர். நாடகத் தலைமை.

திருக்குறள் வகுப்பு

16—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-புரசைபாக்கம், எண் 100, வேளாளத் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில். தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

காங்கிரஸ் பொன்விழா ஞாபகார்த்த மைதானத் திறப்பு விழா

16—11—55 காலை 7-15 மணியளவில், இராசபாளையம் காங்கிரஸ் பொன்விழா ஞாபகார்த்த மைதானத்தையும், அதில் அமைக்கப்பெற்றுள்ள காந்தியார் அவர்களது உருவச் சிலையையும் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரப்பிரசாத் திறந்து வைப்பார் ஒரிசா மாநில முதலமைச்சர் நவகிருஷ்ண சௌத்ரி விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

* * *

காந்தி கலைமன்றத் துவக்க விழா

அன்று காலை 9 மணியளவிற்கு இராசபாளையத்தில் உள்ள காந்தி கலை மன்றத்தை, டாக்டர் இராசேந்திர பிரசாத் துவக்கிவைப்பார். விழாவிற்கு அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் யு. என். தேபர் தலைமை வகிப்பார்.

'பேரம் பேசும் எண்ணமில்லை'

'பஞ்சாபி மொழி மாநிலம் பெற்றே தீருவோம்'

நேருவைச் சந்திப்பது குறித்துத் தாராசிங்

★

அமிர்தசரஸ், நவ. 14—

சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழுத் தலைவரான மாஸ்டர் தாராசிங் மற்றும் அகாலிதளத் தலைவர்கள் வரும் நவம்பர் 24-ந் தேதியன்று பிரதமர் நேருவைச் சந்தித்து பஞ்சாபி மொழிவழி மாநிலம் அமைப்பது குறித்துப் பேசுவர் என்று தெரியவருகிறது.

கடந்த அக்டோபர் 25-ந் தேதியன்று தாராசிங்கும் இன்னும் சிலரும் இதே காரணத்திற்காகப் பிரதமர் நேருவைச் சந்தித்தனர் என்பது நினைவிலிருக்கலாம். பிரதமர் நேரு அண்மையில் பஞ்சாபில் சுற்றுப்பயணம் செய்ததை ஒட்டி, தான், நேருவைச் சந்தித்துப் பேசுவதினால் பலன் கிடைக்கும் என்று தான், நம்புவதாகத் தெரிவித்திருக்கிறாராம் தாராசிங்.

தனது கோரிக்கைக்கு மாற்றாகப் பண்டித நேரு ஏதேனும் திட்டம் தந்தால் என்ன செய்வீர்கள் என்று ஒரு நிருபர் கேட்ட போது,

"நாங்கள் ஒன்றும் பேரம் பேசும் எண்ணம் கொண்டவர்களாயிருக்கவில்லை ; எங்கள் கோரிக்கையான பஞ்சாபி மொழி பேசும் மாநிலம் அடைந்தே தீருவோம் என்று நம்புகிறோம்,"

என்று தாராசிங் பதில் தந்திருக்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு வட்டங்களை தமிழர்கள் பெற விடமாட்டாராம்

கோவிந்த மேனன் சூளுரைக்கிறார்

★

கோட்டயம், நவ. 14—

"உத்தேசிக்கப்பட்டுள்ள கேரள மாநிலத்திலிருந்து தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் ஒருபோதும் பிரிக்கப்படமாட்டாது என்று கேரள மக்களுக்கு உறுதி கூறுகிறேன் ;

"கடந்த திங்களில் வட்டார காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் இது தறித்து மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஒரு மனு தரும்,"

—என்று, திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் மாநாடு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

விசால ஆந்திரம் அமைப்பு

சிக்கல் இருக்காதென நம்பிக்கை!

உறுதி மொழி தருவதாகக் கூறுகிறார் காங்கிரஸ் தலைவர்

★

புதுடில்லி, நவ. 13—

உடனடியாக விசால ஆந்திரம் அமையவேண்டும் என்று காங்கிரஸ் செயற்குழு செய்த முடிவை ஏற்றுக்கொள்வதில் தகராறு ஏதும் இராது என்று கூறப்படுகிறது.

தெலிங்கான மக்கள் தேவை என்று கருதக் கூடியதும், காங்கிரஸ் மேலிடம் கோருவதுமான உறுதி மொழிகளை வழங்க, ஆந்திரத் தலைவர்கள் தயாராயிருப்பதாக, ஆந்திர பிரதேச காங்கிரஸ் தலைவரான சத்தியநாராயண ராஜு தெரிவித்திருக்கிறாராம்.

உத்தியோக விஷயங்களைப் பொறுத்து மக்கள் தொகை அடிப்படையில், தெலிங்கானுவிற்கு பிரதிநிதித்துவம் தர உறுதியளிக்கப்படும்; மேலும், ஏதேனும் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் விசால ஆந்திரத்தில் தீட்டப்படும்போது அவை தெலிங்கான பகுதியில் இடம் பெறுமாறு செய்வோம் என்றும், கல்லூரிகள், தொழில் நுணுக்கக் கூடங்கள் அமைப்பது குறித்தும் தெலிங்கான மக்களுக்கு உறுதி மொழிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் சத்திய நாராயண ராஜு தெரிவித்திருக்கிறார்

அர்ஜெண்டைனுவில் மீண்டும் 'இராணுவப் புரட்சி'

பியூனஸ்அயர்ஸ், நவ. 14—

அர்ஜெண்டைனுவில் குடியரசுத் தலைவராயிருந்த ஜுவான் பெரான் பதவியிலிருந்து நீக்கப்பட்டு புதிய தலைவராக ஜெனரல் எதுயார்டோ லொனார்டி குடியரசுத் தலைவராகி ஏழு கிழமைகள்தான் ஆகின்றன ஆனல், அதற்குள் அவரும் பதவியிலிருந்து துரத்தப்பட்டு ஜெனரல் பெட்ரோ ஆரம்புரு என்பார் குடியரசுத் தலைவராக்கப்பட்டிருக்கிறார்.

லொனார்டி இராஜினமா செய்துவிட்டதா, துவக்கத்தில் அறிவிக்கப்பட்டது. ஆனல், பின்னர், லொனார்டி, தானக பதவியிலிருந்து விலகவில்லை என்றும், தான் பதவியிலிருந்து விலகுமாறு இராணுவத்தினரால் வற்புறுத்தப்பட்டதாயும் கூறியிருக்கிறாராம்.

பின்னர், சர்க்கார் வெளியிட்ட குறிப்பும் இராணுவத்தினர்தான், லொனார்டி பதவியிலிருந்து விலக வேண்டும் எனக் கோரியதாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

சில 'கம்யூனிச எதிர்ப்பு எதேச்சாதிகார' நோக்கங்கொண்டவர்கள், கத்தோலிக்க மதத்தின் பெயரால் அர்ஜெண்டைனுவில் புரட்சியை வேறு திசைக்குத் திருப்ப முயன்றதாகவும் சர்க்காரின் குறிப்பு கூறுகிறது.

தன்னைத் தலைவராகக்கொண்டு நான்கு உயர்தர இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை நியமித்து, தலைவர் ஆரம்புரா பிரகடனம் ஒன்று வெளியிட்டிருக்கிறார்

இப்போது அந்த இராணுவக் குழுவினர் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்றனர்.

அணுகுண்டுக்கு மேலும் ஒருவர் பலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் அணுகுண்டுக்குப் பலியானவர்களின் குடும்பத்தாருக்கு உதவுவதற்காக, ரஷ்ய சமாதானக் குழு 80 000 ரூபிள் வழங்குவதாகத் தெரிவித்திருக்கிறது என்று, அணு—நீர்வளிக் குண்டுகளைத் தடை செய்ய வேண்டுமென்று கோருகிற ஜப்பான் இயக்கம் ஒன்று அறிவித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.